ஆசிரியர் மடல்



நேசமிகு சூசையப்பரின் பாசமிகு இறைமக்களே!

செப்டம்பர் மாதத்தை விவிலிய மாதமாக சிறப்பித்து, இறைவார்த்தையின் ஆழத்தையும் அருமையையும் உணர்ந்து வாழும் வகையில் பல்வேறு நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்கேற்ற மறைக்கல்வி மாணவச் செல்வங்களுக்கும், அவர்களை அர்ப்பணிப்புடன் வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மரியாயின் தினத்தை சிறப்பான முறையிலும் அர்த்தமுள்ள வகையிலும் கொண்டாடிய அனைவருக்கும் எனது அன்பான பாராட்டுகள்.

மேலும், ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் இளையோர் இயக்கத்தினர் மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று, தங்களது திறமைகளையும் நேரத்தையும் அர்ப்பணித்து சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இளையோரின் இந்த ஆர்வமும் ஈடுபாடும் நமது பங்கின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

நமது பங்குப் பேரவை, அன்பியங்கள், மரியாயின் சேனை, வின்சென்ட் தே பவுல் சபை, ஸ்த் பெண்கள் குழு, கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம், இளையோர் இயக்கம், பாடற்குழு, பீடச் சிறுவர்கள், மறைக்கல்வி மன்றம் மற்றும் புனித கார்லோ ஊடகத் தொடர்புக்குழு மற்றும் நல்லசமாரியன் குழு என பங்கில் இயங்கிவரும் அனைத்து இயக்கங்களும், குழுக்களும் பங்கின் பல்வேறு பணிகளில் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஒன்றிப்புடனும் செயல்பட்டு வருவது மிகுந்த மனநிறைவை அளிக்கிறது.

நமது பங்கின் செயல்பாடுகளில் தங்களது நேரம், திறமை, உழைப்பு மற்றும் வளங்களைத் தாராளமாக வழங்கிவரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புனித சூசையப்பரை சிறப்புப் பாதுகாவலராகக் கொண்ட நமது மறைமாவட்டம், தனது 24ஆம் ஆண்டை நிறைவு செய்கிறது. இந்த மகிழ்ச்சியான தருணத்தை நினைவுகூரும் வகையில் ஜூபிலி ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்குகிறது. இந்த அருள்நிறைந்த சிறப்பு ஆண்டிற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி, ஜூபிலி ஆண்டின் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறவும், நமது மறைமாவட்டம் ஆன்மிகத்திலும் பணியிலும் மேலும் வளர்ச்சி பெறவும் செபிப்போம். மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளிலும் நாமும் ஒன்றிணைந்து பங்கேற்போம்.

அக்டோபர் மாதத்தில் அன்னை மரியா வலம் நமது இல்லங்களில் நடைபெறவுள்ளது. அன்னையை நமது இல்லங்களில் அன்புடனும் பக்தியுடனும் வரவேற்போம். குடும்பமாக ஒன்றுகூடி செபமாலை செபித்து, நமது குடும்பங்களின் தேவைகள், கவலைகள் மற்றும் நல்வாழ்வை அன்னையின் திருவடிகளில் அர்ப்பணிப்போம். அன்னையின் பரிந்துரையின் வழியாக இறைவனின் அருளையும் ஆசீரையும் பெற்றுக்கொள்வோம்.

நவம்பர் மாதத்தை மரித்த விசுவாசிகளுக்காக சிறப்பாக ஒப்புக்கொடுத்து செபிப்போம். நம்மை விட்டுப்பிரிந்த நமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும்

ஆசிரியர் மடல்

அன்புக்குரியவர்களுக்காக திருப்பலிகளை ஒப்புக்கொடுத்து, அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிப்போம். அவர்களின் நினைவாக இயன்ற அளவில் தர்ம காரியங்களையும் நற்செயல்களையும் மேற்கொள்வோம்.

நமக்கு வாழ்வளித்து, நம்மை வளர்த்து, நல்வழிப்படுத்தியவர்களுக்கு நன்றியுணர்வுடன், திருப்பலியில் தவறாமல் பங்கேற்று, நமது விசுவாச வாழ்வை மேலும் ஆழப்படுத்துவோம்.

நவம்பர் 29–அன்று திருவருகைக் காலம் தொடங்குகிறது. கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் புனிதப் பயணத்தைத் தொடங்கும் இக்காலத்தில், நமது உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி, இறைவனின் வருகைக்காக ஆன்மிகத் தயாரிப்புடன் காத்திருப்போம். கிறிஸ்துமஸ் விழாவை வெறும் கொண்டாட்டமாக மட்டுமல்லாமல், அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொள்ளும் விழாவாக மாற்றுவோம். நம்மைச் சுற்றியுள்ள தேவையுள்ளவர்களை நினைவுகூர்ந்து, இயன்ற உதவிகளைச் செய்து, கிறிஸ்துவின் அன்பை அவர்களுடன் பகிர்வோம்.

நமது பங்கிலுள்ள அன்பியங்கள், பக்த சபைகள் மற்றும் அனைத்து இயக்கங்களும், பங்கின் வளர்ச்சிக்கும் மாண்பிற்கும் உறுதுணையாக ஒன்றிணைந்து செயல்பட்டு வருவது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. நமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் வழங்கிவரும் தாராளமான நிதியுதவிகளுக்கும், உழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது ஆலய வளர்ச்சியோடு மட்டுமல்லாமல், பிற பங்குகளில் புதிய ஆலயங்கள் எழுப்புவதற்கும், குருமாணவர்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கும் நீங்கள் வழங்கிவரும் தாராளமான உதவிகள், உங்கள் விசுவாசத்தையும் பிறர்மீது கொண்ட அன்பையும் வெளிப்படுத்துகின்றன. உங்கள் தாராள உள்ளங்களை எண்ணி மகிழ்கிறேன். இறைவன் உங்கள் தியாகங்களையும் அர்ப்பணிப்பையும் பலமடங்கு ஆசீர்வதிப்பாராக!

பங்கின் வளர்ச்சிக்கான முக்கியமான பணிகளில் எவ்வாறு ஒன்றுபட்டு, ஒருமனதுடன் செயல்படுகிறீர்களோ, அதே ஒன்றிப்புடனும் ஆர்வத்துடனும் அன்பியக் கூட்டங்களில் தொடர்ந்து பங்கேற்று, அன்பிய வாழ்வை வலுப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்பியங்கள் நமது ஆன்மிக வளர்ச்சிக்கும், குடும்பங்களின் ஒன்றிப்பிற்கும், பங்கின் வளர்ச்சிக்கும் வலுவான தளமாக அமையட்டும்.

நமது பங்கின் ஒவ்வொரு குடும்பமும் இறைவனின் அன்பிலும் அருளிலும் வளர்ந்து, விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றில் நாளுக்கு நாள் வலுப்பெற எனது செபங்களில் உங்களை நினைவுகூர்கிறேன்.

புனித சூசையப்பரின் பரிந்துரையால், இறைவனின் நிறையாசீரும் அமைதியும் மகிழ்ச்சியும் உங்கள் குடும்பங்களில் என்றும் தழைத்தோங்கிட மனமார்ந்த செபங்களை ஏறெடுக்கிறேன்.



பாசமுடன்
அருட்பணி. **தாமஸ் பிரேம்குமார்**
பங்குத்தந்தை

My beloved and affectionate faithful of Saint Joseph



First and foremost, I would like to express my great joy, appreciation, and heartfelt congratulations to all the children of the Catechism and their teachers who made the month of September, the Month of the Bible, a meaningful and spiritually enriching one. Also celebrating the Marian day in a grand and meaningful manner.

Very happy to congratulate the members of Youth for their active participation in various events in the month of August

It is also a matter of great satisfaction to see all of you the Parish Council, Anbiams, Legion of Mary, Society of St. Vincent de Paul, Ruth Women's group and Christian Workers' Movement, Youth Movement, Choir, Altar Servers, Catechism Forum, and St Carlo Media Communication group and Good Samaritan group participating actively and unitedly in the various activities of our parish and making your valuable contributions. I convey my heartfelt appreciation and congratulations to each one of you.

Our Diocese, which has St. Joseph as its special patron, is completing 24 years since its establishment. The Jubilee Year commemorating this milestone will begin in the month of October. Let us pray for the success of this special year and actively participate in the initiatives undertaken for the growth and development of our Diocese.

During the month of October, I lovingly request you to welcome Mother Mary into your homes with spiritual devotion, gather as a family to pray the Rosary, and place your prayers and intentions for the well-being of your families before our Blessed Mother and seek her intercession.

Let us dedicate the month of November especially to praying for the departed faithful. I request all the faithful to offer Holy Masses doing some charitable acts, prayers for the departed souls of their families during this month. Let us also participate regularly in Holy Mass, giving thanks to those who gave us life and nurtured us.

The Season of Advent begins on 29 November. As we begin our spiritual journey towards the celebration of the birth of Christ, let us give importance to purity of heart and prepare ourselves spiritually. Let us come forward to celebrate Christmas as a festival of sharing, spreading joy and extending our love and care to others.

It is truly commendable that all the movements and associations in our parish, including the Anbiams and devotional groups, are working towards enhancing the dignity and growth of our parish. I am especially happy and grateful for your generous hearts not only in supporting the development of our own church, but also in extending your assistance towards the construction of new churches in other parishes and providing financial support for the formation and growth of seminarians.

I pray that God's abundant blessings may flourish in all your families.

Just as you come together in unity to accomplish important initiatives for the growth of our parish, I encourage you to continue the same spirit of unity by actively participating in Anbiam meetings and working together to deepen and strengthen your spiritual life.

I pray that, through the intercession of St. Joseph, God's abundant blessings may flourish in your families.

Lovingly,

Fr. Thomas Premkumar
Parish Priest
Fr. Wilson Kumar
Asst.Parish Priest

உன்னதமான அமைதிக்கு உரியவர் புனித சூசையப்பர்

– ரோனா ஆல்பர்ட்



தனிப்பட்ட ஒரு மனிதரின் அமைதி என்பது அவருடைய மனம் எந்தவிதமான பயமும், கோபமும், மனஅழுத்தமும் இன்றி, தெளிவான மற்றும் நிம்மதியான நிலையில் உள்முகமாக இயங்கும் தன்மையாகும். நம்முடைய வெளிப்புறச்சூழல்களுக்கு மத்தியிலும் மனம் குழம்பாமல் நடுநிலையாக இருப்பதும், கோபம், பொறாமை, கவலை போன்ற எதிர்மறை எண்ணங்களைத் தூர எறிந்து நேர்மறையாக சிந்திப்பதும், நமக்குக் கிடைத்ததை ஏற்றுக்கொண்டு, தற்போது வாழ்க்கையை மனத்திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதும் அமைதியின் முக்கியக் கூறுகளாகும்.

ஒருவரின் அமைதி கெடுவது வெளிப்புற நிகழ்வுகளாலும், மனப் போராட்டங்களாலும் அல்லது இவ்விரண்டின் கலவையாலும் ஏற்படும் குழப்பங்களால் தான். குழப்பங்கள் நிறைந்த சவாலான சூழ்நிலைகளுக்கு நடுவே தனக்குள்ளேயே ஒருவர் அமைதியான நிலையைக் கண்டறிந்து செயலாற்றுவது என்பது எளிதான காரியம் அல்ல. அத்தகு அசாதாரண அமைதியில் செயல்பட்டவர் சூசையப்பர். அவர் புயல்களிலிருந்து விடுபட்டு ஓடவில்லை, புயல்களுக்கு மத்தியில் கடவுளின் கட்டளைகளை அமைதியோடு நிறைவேற்றினார். எதிர்பார்ப்புகளைக் கைவிட்டு போராட்டங்களை ஏற்றுக்கொண்டார். அவருடைய அமைதி என்பது அவருடைய மனம், உடல் மற்றும் ஆன்மாவை சமநிலையில் இணைத்திருந்தது. அமைதி என்பது உள்ளிருந்து வரும் ஒரு மெல்லிய வலிமை என்பதை உணர்ந்திருந்த சூசையப்பர், தன்னம்பிக்கையை விட இறைநம்பிக்கையின் இயக்கத்துக்கு உட்பட்டு நடந்தார். அசையாமல் இருக்கும்போதுதான் அமைதி இருக்கும் என்பர். இறைவனின் வார்த்தைகளுக்கு இசைந்த அவர், அசைவில்லாமல் செயல்படவில்லை, ஆபத்துக்கள் நடுவே செயல்பட்டார்.

வார்த்தையின் வலிமையில் அமைதி

புனித அகுஸ்தினார் கூறுகின்றார். வார்த்தை (மனிதனாய் உருவெடுத்த வார்த்தை) நம்மில் வளரும் அளவிற்கு நமது வார்த்தைகள் குறைகின்றன. இறைவார்த்தையாகிய இயேசு நம்மில் வளரும்போது நம்முடைய வார்த்தைகளும் குறைகின்றன. ஆம், இயேசுவோடு இருக்கும்போது இயல்பாகவே அமைதியும் மௌனமும் நம்மைப்பற்றிக் கொள்கின்றன. சூசையப்பரும் இயேசுவோடு இருந்தவர் என்பதால் அவர் மௌனியாகவே நற்செய்திகளில் காட்டப்படுகிறார். இதன் அடிப்படையில் திருத்தந்தை பிரான்சிஸ் "நாசரேத்தின் சூசையப்பருடைய எந்த வார்த்தையையும் நற்செய்திகள் நமக்குத் தெரிவிக்கவில்லை. பேசாதவராகக் காட்டப்பட்டதால் அவர் வாய் பேச முடியாத ஊமையாக இருந்தார் என்று அர்த்தமல்ல. மாறாக அவர் அமைதியாக இருந்தார். அவருடைய அமைதிக்கு

ஆழமான காரணம் இருந்தது. அந்தக் காரணம் அவர் கண்முன்னேயே வார்த்தை மனுவுருவாகி வளர்ந்ததுதான்.

திருமுழுக்கு யோவானும் இதையேதான் அவர் பெருகவேண்டும், நான் குறைய வேண்டும்" (யோவான் 3:30) என்றார். இதன் பொருள் இயேசு பேசவேண்டும், தான் அமைதியாக இருக்க வேண்டும் என்பதே. அதாவது இயேசு வளரவேண்டும், தான் குறையவேண்டும் என்பதையே திருமுழுக்கு யோவான் விரும்பினார். இறைமகன் இயேசுவின் வருகைக்குப்பின் அவருடைய அமைதியையே நற்செய்திகள் நமக்கு அறிவிக்கின்றன. அதேபோலவே, ஏன் அதற்கும் மேலாகவே சூசையப்பர் தனது அமைதியால் இயேசுவுக்கு இடமளித்தார். சூசையப்பரின் அமைதியை நாம் வாழ வேண்டும் என்றால், முதலில் அவருடையது எவ்வகையான அமைதி என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அவருடைய அமைதியை ஒருபோதும் மௌனமாகவோ, நிசப்தமாகவோ நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல புனித சூசையப்பரின் அமைதி என்பது சாதாரண அமைதியல்ல; மாறாக அடுத்தவர் கூறுவதை தன்மையாகக் கேட்கும் அமைதி. கடின உழைப்பினால் ஏற்படும் ஒப்பற்ற அமைதியாகும்.

அமைதிக்கான அடிப்படை பண்புகள்

புனித சூசையப்பர் இயல்பிலேயே நீதிமான் மற்றும் நேர்மையாளர். கடவுள் யூத மக்களுக்கு வகுத்தளித்த சட்டங்களின்படி வாழ்ந்தவர். பிறருக்கு எள்ளளவும் தீங்கிழைக்க எண்ணாதவர். கனிந்த மனம் கொண்டவர். அதிகம் பேசாமல் தன் செயல்கள் மூலம் அன்பைக் காட்டியவர். கடுமையான சூழலிலும் அமைதியையும் பொறுமையையும் கைவிடாதவர். வியர்வை சிந்தி நேர்மையாக உழைத்த உழைப்பாளர்களுக்கு உதாரணமாக இருந்தவர்.

இத்தகைய அடிப்படை பண்பு நலன்களைக் கொண்ட சூசையப்பரையே சிறுவயது உலக மீட்பரைக் காப்பதற்காக இறைவன் தேர்வு செய்தார். சூசையப்பருமே இறைவனுக்குப் பணிந்தவராய், அவர் தூதர் மூலமாகச் சொன்ன வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொண்டார். கடவுள் எதை செய்யப் பணித்தாலும் தயங்காமல் இறைச்சித்தத்திற்கு தலை வணங்கினார். அன்னை மரியாவுக்கும், குழந்தை இயேசுவுக்கும் அன்பும் பாதுகாப்பும் அளிக்கும் அரணாக விளங்கினார். நாடுவிட்டு நாடு மாறிச் சென்றாலும் இருவரையும் கண்மணிபோல் பாதுகாத்தார். அயராத உழைப்பாளியான அவர், தச்சுத்தொழில் செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றினார். செல்வம் அல்லது புகழை விரும்பாமல் பொறுமையோடும் அமைதியோடும் திருக்குடும்பத்தை பாதுகாத்து வழிநடத்தினார். ஆழ்ந்த அமைதியில் மட்டுமே கடவுள் தூதரின் வழிகாட்டுதலைப் புரிந்துகொண்டு சோதனைகளையும், சந்தேகங்களையும் நம்பிக்கையாக மாற்றினார்.

குழப்பமும் தெளிவும்

குழப்பம் என்பது மனத்தின் சீர்குலைவு, தடுமாற்றம் அல்லது நிச்சயமற்ற தன்மையைக் குறிக்கும். குழப்பங்களுக்கு மத்தியில் அமைதியைக் கண்டடைவது சாதாரண காரியமல்ல. நிகழ்காலத்தில் கவனம் செலுத்தவும், மனஅழுத்தத்தைச் சமாளிக்கவும், அமைதியான உணர்வை வளர்த்துக்கொள்ளவும் போராட வேண்டியிருக்கும். வாழ்க்கை பெரும் சுமையாகவோ அல்லது கணிக்க முடியாததாகவோ தோன்றும்போது உள்ளார்ந்த மனவுறுதியை வளர்த்துக்கொண்டு, ஒருவித சமநிலையைப் பேணுவது மிகக் கடினமான செயல். எனினும் அசாதாரண அமைதிக்கான அடிப்படை அதுவே. இந்த அடிப்படையை சூசையப்பர் உணர்ந்திருந்ததை இறைவன் அவருக்குக் கொடுத்த மிகப் பெரிய வரமாகக் கருதலாம்.

மனைவி மரியா தன்னோடு வாழும் முன்பு, அவர் தூய ஆவியால் கருவுற்றிருப்பதை அறிந்த நீதிமானாகிய சூசையப்பர் குழப்பமும், வேதனையும் அடைந்தார். திருச்சட்டப்படி மரியாவை வெளிப்படையாகக் கண்டிக்கவோ, இகழ்ச்சிக்கு உள்ளாக்கவோ விரும்பாமல், ஊர் அறியாமல் மறைவாக ஒதுக்கிவிட முடிவு செய்தார். தன் மணவாழ்க்கை குறித்து ஆழ்ந்த சிந்தனையிலும் கலக்கத்திலும் இருந்தபோது, கடவுளின் தூதர் கனவில் தோன்றி உணர்த்தியதன் வழியாக இறைத்திட்டத்தை உடனடியாக ஏற்றுக்கொண்ட அவர், தனது மனைவியாக மரியாவையும் ஏற்றுக் கொண்டார். மனைவியின் கர்ப்பத்தை அறிந்தது முதல், வானதூதர் தெளிவுபடுத்தும் நாள்கள் வரையிலும் இடைப்பட்ட காலத்தில் அவர் ஒரு சராசரி மனிதனாக குழப்பமும், ஐயமும் கொண்டவராய், தனது அமைதியை இழந்திருந்து பின்னர் ஐயங்களில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டார். சூசையப்பரைப் பொறுத்தவரை ஒரு சாதாரண மனிதரது மனநிலையிலிருந்து வேறுபட்டு, எதையும் வெளிக்காட்டாமல் தன் குழப்பங்களுக்கு நடுவிலும் சாந்தமாக விளங்கினார். ஆம், சாந்தம் என்பதே வாழ்க்கையின் சவால்களுடன் அமைதியாக இணைந்து வாழும் நிலைதானே.

புனித சூசையப்பரின் அமைதி என்பது வார்த்தைகள் அற்ற செபத்தையும், இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாகப் பணிந்து நடக்கும் தாழ்ச்சியையும் குறிக்கிறது. புனித சிலுவை யோவான் கூறுகிறார்: எப்பொழுதும் அமைதியில் உரையாடுகின்ற விண்ணகத் தந்தையின் இறைவார்த்தையைக் கேட்கின்ற அமைதி சூசையப்பருடைய அமைதி. அவரது அமைதியில், அவரது உள்ளத்தின் ஆழத்தை இறைவனும் உணர்ந்து கொள்கிறார். நமது அமைதியிலும் நம் உள்ளத்தின் ஆழம் வெளிப்படுகிறதா? கடவுளின் வார்த்தையையும், நம் அயலாருடைய பேச்சுகளையும் எவ்வித சலனமுமின்றி கேட்குமளவுக்கு நம் உள்ளம் அமைதியாக இருக்கிறதா? இவ்வினாக்களுக்கு விடை தேடி மாற்றம் பெற்று வாழவே சூசையப்பரின் உன்னத அமைதி நம்மை அழைக்கின்றது.

நவம்பர் மாதத்தில் மரித்த ஆன்மாக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தல்

தேதி	கிழமை	அன்பியத்தின் பெயர்
02-11-2026	திங்கள்	புனித அல்போன்சா அன்பியம்
03-11-2026	செவ்வாய்	புனித அமல அன்னை அன்பியம்
04-11-2026	புதன்	புனித அந்தோணியார் அன்பியம்
05-11-2026	வியாழன்	புனித அருளானந்தர் அன்பியம்
06-11-2026	வெள்ளி	புனித தோமினிக் அன்பியம்
07-11-2026	சனி	புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம்
09-11-2026	திங்கள்	புனித இன்னாசியார் அன்பியம்
10-11-2026	செவ்வாய்	குழந்தை இயேசு அன்பியம்
11-11-2026	புதன்	புனித யாகப்பர் அன்பியம்
12-11-2026	வியாழன்	புனித யோவான் அன்பியம்
13-11-2026	வெள்ளி	புனித இரண்டாம் ஜான் பால் அன்பியம்
14-11-2026	சனி	புனித சூசையப்பர் அன்பியம்
16-11-2026	திங்கள்	புனித மத்தேயு அன்பியம்
17-11-2026	செவ்வாய்	புனித மைக்கேல் அன்பியம்
18-11-2026	புதன்	புனித கபிரியேல் அன்பியம்
19-11-2026	வியாழன்	புனித அன்னை தெரேசா அன்பியம்
20-11-2026	வெள்ளி	புனித சின்னப்பர் அன்பியம்
21-11-2026	சனி	புனித மழை மலை மாதா அன்பியம் & புனித நிக்கோலாஸ் அன்பியம்
23-11-2026	திங்கள்	புனித பேட்ரிக் அன்பியம்
24-11-2026	செவ்வாய்	புனித தேவசகாயம் அன்பியம்
25-11-2026	புதன்	புனித பேதுரு அன்பியம்
26-11-2026	வியாழன்	புனித சகாய அன்னை அன்பியம்
27-11-2026	வெள்ளி	புனித பாத்திமா அன்னை அன்பியம்
28-11-2026	சனி	புனித தோமையார் அன்பியம்



உலக வெற்றியிலிருந்து இறைப்பணிக்கு புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீக வழிகாட்டுதலில் வளர்ந்த புனித பிரான்சிஸ் சவேரியார்

ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (மாற்கு 8:36) பொதுவாக, டிசம்பர் மாதம் என்றாலே நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை எதிர்நோக்கி, திருவருகைக் காலத் தியானங்களிலும், கொண்டாட்டங்களிலும் நாம் ஈடுபடுகிறோம். இந்த டிசம்பர் மாதத்திற்கு இன்னொரு சிறப்பாக, மாதத் தொடக்கத்தில், டிசம்பர் 3-ஆம் நாள் கொண்டாடப்படும் புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருவிழாவும் நமக்கு ஒரு சிறப்பான ஆன்மீக அழைப்பாக அமைகிறது. குறிப்பாக, இந்தியாவிலும் நம்முன்னோர்களின் வாழ்விலும் நற்செய்திப் பணியின் வழியாக புனித சவேரியார் ஏற்படுத்திய தாக்கத்தை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். பாரிஸில் புனித இஞ்ஞாசியாருடன் ஏற்பட்ட சந்திப்பு, அதன் வழியாக சவேரியாரின் வாழ்வில் நிகழ்ந்த ஆன்மீக மாற்றம் சிறிய அறிமுகம் இந்தக்கட்டுரை.

ஒருவருடைய வாழ்க்கையில் சில சந்திப்புகள் அவரது வாழ்க்கையின் முழுப்பாதையையே மாற்றி விடுகின்றன. சில நட்புகள் வெறும் மனித உறவுகளாக இருப்பதில்லை அவை இறைவனின் அருளுக்கானக் கருவிகளாக மாறுகின்றன. புனித லொயோலா இஞ்ஞாசியாருக்கும் புனித பிரான்சிஸ் சவேரியாருக்கும் இடையிலான நட்பு அத்தகைய அருள் நிறைந்த சந்திப்பாகும்.

இளைஞரான பிரான்சிஸ் சவேரியார் கல்வி, அறிவு, புகழ் மற்றும் உலகவெற்றி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். மறுபுறம், இஞ்ஞாசியார் ஏற்கெனவே ஆழமான மனமாற்றத்தை அனுபவித்து, தனது முழு வாழ்க்கையையும் கிறிஸ்துவின் சேவைக்காகஅர்ப்பணிக்கத் தொடங்கியிருந்தார். பாரிஸில் இவர்கள் சந்தித்த போது, தங்கள் நட்பு திருச்சபையின் வரலாற்றில் இவ்வளவு முக்கியமானதாக மாறும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

இருபுனிதர்கள் இருவேறுபட்டபயணங்கள்

புனித லொயோலா இஞ்ஞாசியார் 1491 ஆம் ஆண்டு ஸ்பெயினின் பாஸ்க் பகுதியில் பிறந்தார். இளமையில் வீரமும், புகழும், பதவியும், உலகப்பெருமையும் கொண்ட வாழ்க்கையை விரும்பினார். போரில் ஏற்பட்ட கடுமையான காயத்தால் நீண்டகாலம் ஓய்வெடுக்கவேண்டியபோது, கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் புனிதர்களின் வாழ்க்கை பற்றிய நூல்களை வாசித்தார். அந்த வாசிப்பு அவரது உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. தமது உள்ளத்தில் எழும் ஆசைகள் தம்மை எங்கு வழிநடத்துகின்றன என்பதை கவனிக்க அவர் கற்றுக்கொண்டார். இவ்வனுபவங்களே பின்னர் ஆன்மீகப்பயிற்சிகள் எனப்படும் ஆன்மீகப்பாதைக்கு அடித்தளமாக அமைந்தன.

புனித பிரான்சிஸ் சவேரியார் 1506-ஆம் ஆண்டு நவாரே பகுதியில் பிறந்தார். உயர் குடும்பத்தைச் சேர்ந்த அவர், உயர் கல்விக்காக பாரிஸுக்குச் சென்றார். அங்கு அறிவிலும் திறமையிலும் சிறந்து விளங்கிய இளைஞராக இருந்தார். கல்வி, புகழ்,

பதவி, வெற்றி ஆகியவை அவரது எதிர்காலக் கனவுகளாக இருந்தன. அப்போதுதான் அவரது வாழ்க்கையில் இஞ்ஞாசியார் வந்தார்.

ஆன்மீகப்பயிற்சிகள்

புனித இஞ்ஞாசியார் தனது மனமாற்ற அனுபவங்களிலிருந்து உருவாக்கியதே ஆன்மீகப்பயிற்சிகள் (Spiritual Exercises). இறைவனை ஆழமாக அறிந்து கொள்ளவும், தமது வாழ்க்கையை ஆராயவும், கிறிஸ்துவோடு நெருக்கமான உறவை வளர்க்கவும், இறைத்திருவுளத்தை அறிந்து அதன்படி வாழவும் உதவும் கட்டமைக்கப்பட்ட ஆன்மீகப்பாதையாகும். முழுமையான ஆன்மீகப் பயிற்சிகள் பாரம்பரியமாக சுமார் 30 நாட்கள்கொண்ட அமைதியான தியானப்பயணமாக நடத்தப்படுகின்றன. அவை நான்கு முக்கிய பகுதிகளாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன:

முதல்பகுதி இறைவனின் அன்பையும் நமது மனமாற்றத்தையும் அறிதல்:

இறைவன் முதலில் நம்மை அன்பு செய்கிறார் என்பதை உணர்ந்து, அவரது இரக்கத்தின் முன்னிலையில் நமது தவறுகளை நேர்மையாகப்பார்ப்பது.

இரண்டாம் பகுதி இயேசுவைப் பின்பற்றுதல்:

அவரது வாழ்க்கை, போதனை, அழைப்பு ஆகியவற்றைத் தியானித்து, அவரை இன்னும் நெருக்கமாக அறிந்து, அன்பு செய்து, பின்பற்றுதல்.

மூன்றாம்பகுதி கிறிஸ்துவின் பாடுகளும் சிலுவையும்:

சிலுவையில் வெளிப்படும் இறையன்பைத் தியானித்து, கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் தியாகமும் துன்பமும் இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

நான்காம் பகுதி உயிர்ப்பும் பணியும்:

உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சியில் பங்குபெற்று, பெற்ற நம்பிக்கையை வாழ்விலும் சேவையிலும் வெளிப்படுத்துதல். இவ்வாறு இந்தப் பயணம் மனமாற்றத்திலிருந்து சீடத்துவத்திற்கும், சீடத்துவத்திலிருந்து பணிக்கும் அழைத்துச் செல்கிறது.

இஞ்ஞாசிய ஆன்மீகத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பழக்கங்கள்:

தினசரி மனசாட்சிப் பரிசோதனை : நாளின் இறுதியில் இறைவனின் முன்னிலையில் நமது நாளைத் திரும்பிப் பார்த்து, இறைவனின் அருளையும் நமது தவறுகளையும் உணர்ந்து கொள்வது.

இறைத் திருவுளத்தைத் தேர்ந்தறிதல்: நமது எண்ணங்களும் ஆசைகளும் நம்மை கிறிஸ்துவிடம் நெருக்கமாக்குகின்றனவா என்பதை ஆராய்வது.

நற்செய்தியைத் தியானித்தல்: நற்செய்தி நிகழ்வுகளை வெறுமனே வாசிப்பதற்குப் பதிலாக, அந்த நிகழ்வில் நம்மையும் நிறுத்தி தியானிப்பது.

எல்லாவற்றிலும் இறைவனைத் தேடுதல்: ஆலயத்திலும் செபத்திலும் மட்டுமல்லாமல், குடும்பம், வேலை, உறவுகள், சேவை, துன்பம் என வாழ்க்கையின் ஒவ்வொரு சூழலிலும் இறைவனின் இருப்பைத் தேடுவது. பற்றின்மையும் ஆன்மீகச் சுதந்திரமும்: பணம், பதவி, புகழ், வெற்றி போன்றவை நம்மை ஆட்கொள்ளாமல், அவற்றைவிட இறைவனின் திருவுளத்தை முன்னிறுத்தும் சுதந்திரத்தைப் பெறுவது. சவேரியாரின் வாழ்க்கை இதற்குச் சிறந்த சான்றாகும்.

சவேரியாரின் வாழ்க்கையிலிருந்து நமது வாழ்க்கைக்கு நாம்

சவேரியாரைப்போல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் பயணம் செய்ய வேண்டியதில்லை புனித பிரான்சிஸ் சவேரியாரை மதிப்பதற்கான சிறந்த வழி, அவரைப் புகழ்ந்து பேசுவது மட்டுமல்ல அவரை உருவாக்கிய ஆன்மீகப் பாதையை நாமும் பின்பற்றுவதே.

ஒரு ஐந்து நிமிடசெபம் : ஒரு நற்செய்திப் பகுதி; ஒரு மனசாட்சிப் பரிசோதனை; ஒரு சிறிய அன்புச் செயல்; சில நிமிட அமைதி. இவை போன்ற சிறிய ஆன்மீகப் பழக்கங்கள் தொடர்ந்து செய்யப்படும்போது பெரிய மனமாற்றங்கள் உருவாகின்றன.

திரு. சேவியர் நவின். பி. – புனித பேட்ரிக் அன்பியம்



மரியாயின் சேனை


நமது பங்கில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மாலை 04.30 மணியளவில் மரியாயின் சேனை புனித காணிக்கை மாதா பிரசீடியக் கூட்டமும், ஒவ்வொரு மாத இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை காலை மறைக்கல்வி வகுப்புகளுக்குப் பின் 10.00 மணியளவில் புனித இரக்கத்தின் மாதா சிறுவர் பிரசீடியக் கூட்டமும் நடைபெற்று வருகிறது.

சென்ற 26-09-2026 சனிக்கிழமையன்று புனித காணிக்கை மாதா பிரசீடியத்தின் 42வது ஆண்டு விழா மற்றும் புனித இரக்கத்தின் மாதா சிறுவர் பிரசீடியத்தின் 2-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

நமது பாசமிகு பங்குத்தந்தை அருட்பணி. தாமஸ் பிரேம்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், கியூரியாத் தலைவர் சகோ. இரத்தினம், கியூரியா செயலர் சகோ. ஆரோக்கியராஜ், துணைத்தலைவி சகோதரி அமலோற்பவ மேரி, புனித வின்சென்ட் தே பவுல் சபை தலைவர் சகோ. செபாஸ்டின், பங்குப்பேரவை துணைத் தலைவர் சகோ. ஞானம், நமது பங்கின் புனித ஜோசப் தொழிலாளர் இயக்கம் மற்றும் ஸ்ரீத் பெண்கள் பணிக்குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

சகோதரி மரிய ஸ்ரீத் அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க, சகோ. ஜோசப் அமல்ராஜ் அவர்கள் வரவேற்புரை நல்கினார். சிறுவர் பிரசீடிய சிறுமிகளின் வரவேற்பு நடனத்திற்கு பின்னர், சகோதரி மஞ்சுளா மேரி அவர்கள் ஆண்டு அறிக்கையையும், சகோதரி அமலோற்பவ மேரி அவர்கள் நிதி நிலை அறிக்கையையும் சமர்ப்பித்தார்கள். நடனம் ஆடிய சிறுமிகளுக்கு பரிசுகள் வழங்கிய பங்குத்தந்தை அவர்கள் இரண்டு பிரசீடியங்களுக்கும் தமது ஆசியுரையை வழங்கினார். மரியாயின் சேனைத் தலைவர் சகோ. வின்சென்ட் அவர்கள் நன்றியுரை கூற சேனை இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் :
9840457295 / 9894971344



வாழும் ஜெபமாலை இயக்கம்

வழங்கும்

உரையாடல் வழி தியானம்

கத்தோலிக்கத்தின் பெருமையும் கத்தோலிக்கரின் கடமைகளும்

கேள்வி – பதில் உரையாடல் மூலம் உண்மைகளை அறிவோம் !

நாள் : 19.10.2026 திங்கட்கிழமை(அரசு விடுமுறை) காலை 8.30 முதல் மாலை 4.30 வரை

இடம் : புனித சூசையப்பர் ஆலயம், சேலையூர், சென்னை-73.

53 கிலோ ஜெபமாலை பவனியுடன் ஆரம்பமாகும்



பைபிள், ஜெபமாலை குறிப்பு புத்தகம் கொண்டு வருக

ஆன்மீகப் புத்தக விற்பனை உண்டு

தலைப்புகள்

1. ஆன்மாவின் பெருமை சொல்லும் ஆதியாகமம்
2. தீர்க்கதரிசனம் உண்டாக்கிய தீராப்பகை
3. அன்பும் நீதியும் ஆண்டவரின் நாணயத்தின் இரு பக்கங்கள்.
4. ஆண்டவர் உண்டாக்கிய அவரது சபை
5. பூசை மீது ஆசை வை
6. பைபிள் வந்த வரலாறு
7. விவிலியம் வாசிக்க விதிமுறைகள்
8. மரணம் - தீர்ப்பு - மோட்சம் - நரகம்
9. உத்தரிக்கிற ஸ்தலம் பற்றிய உண்மைகள்
10. நல்ல கள்ளன் எனும் மோட்ச வழிகாட்டி
11. எரிகின்ற முட்செடியில் என்றுமுள்ள கன்னி
12. உத்தரியம் எனும் உத்தரவாதம்
13. மாதாவின் விண்ணேற்பு பற்றி புனித அந்தோணியார் காண்பித்த பைபிள் ஆதாரம்
14. அலகையை அடக்கும் ஆற்றல் மிக்க சங்கிலி
15. முதல் வெள்ளி, முதல் சனி ஏன் ?
16. எது சிலை வழிபாடு ?
17. விவிலியத்தில் புனித சூசையப்பரின் பெருமைகள்

அன்புடன் அழைக்கும்,

பங்குத்தந்தை தாமஸ் பிரேம் குமார் | உதவி பங்குத்தந்தை வில்சன்



புனித வின்சென்ட் தே பவுல் சபையினரின் கடந்த மூன்று மாத (ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் 2026) செயல்பாடுகள்

தத்துக் கிராமக் குடும்பங்கள் சந்திப்பு :

நமது சபை தத்து எடுத்துள்ள துறையூர் கிராமத்தில் உள்ள குடும்பங்களை 08-08-2026 அன்று நேரில் சென்று சந்தித்து அவர்களுக்காக செபித்து அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆடுகளின் நிலை அறிந்து கொள்ளப்பட்டது. பின்னர், அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஆலயத்தில் கூடி வேடந்தாங்கல் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயராஜ் அவர்களுடன் இணைந்து செபமாலை செபிக்கப்பட்டது. கிராம மக்கள் அனைவரும் இறைவார்த்தையைப் படிப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் திருவிவிலியம் வழங்கப்பட்டது. கிராம மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு உதவியாக கிராம மக்களிடம் கலந்து பேசி கிறிஸ்து பிறப்பு விழாவன்று இலவசமாக மாடு வழங்க முடிவு செய்யப்பட்டது.

கல்வி உதவித் தொகை :

கல்வி உதவித் தொகை வேண்டி வந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து அதில் தகுதியான மாணவர்கள் 16 பேருக்கு கல்வி உதவித் தொகையாக மொத்தம் ரூ.61,000 வழங்கப்பட்டது (பள்ளி மாணவர்கள் 12 பேர், கல்லூரி மாணவர்கள் 4 பேர்). கல்வி உதவித் தொகை பெற்ற மாணவர்களுடன் உரையாடி செபித்து அவர்களுக்கு புனிதர்களின் வாழ்க்கை வரலாறு நூல்களும் மாதாவின் அற்புத பதக்கமும் வழங்கப்பட்டது.

வீடு கட்டுவதற்கு உதவி :

ஒட்டியம்பாக்கம் புனித சகாயமாதா ஆலயத்தைச் சார்ந்த கிளைச் சபை உறுப்பினர்கள் நமது சபையை தொடர்பு கொண்டு அங்குள்ள ஒரு ஏழைக் குடும்பத்திற்கு வீடு கட்டி தருவதற்காக உதவும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க கடந்த 20.07.2026 அன்று ரூ.10,000 க்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும், நமது பங்கின் ஆலயப் பணியாளர் ஒருவர் தமது வீட்டை புதுப்பிக்க உதவும்படி கேட்டு அளித்த விண்ணப்பத்தை பரிசீலித்து கடந்த 09-08-2026 அன்று ரூ.10,000 க்கான காசோலை வழங்கப்பட்டது.

இதர உதவி :

St. Joseph's Hospice லிருந்து நமது பங்கிற்கு வருகை தந்த அருட்தந்தை தாமஸ் அவர்களிடம் நமது சபை சார்பாக ரூ.15,000 க்கான காசோலை வழங்கப்பட்டது.

ஆன்மீக உதவிகள் :

எலும்பு முறிவு காரணமாக ஆலயத்திற்கு வர இயலாத நிலையில் இருந்த ஒருவருக்கு அவரது இல்லத்திற்குச்சென்று திவ்விய நற்கருணை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆலய வளாக உண்டியல் :

ஒவ்வொரு மாதமும் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலய வளாகத்தில் பங்கு மக்களிடம் உண்டியல் மூலம் ஜூலை மாதத்தில் ரூ.7,300/-ம், ஆகஸ்ட் மாதத்தில் ரூ.6,440/ம், செப்டம்பர் மாதத்தில் ரூ.11,230/-ம் காணிக்கையாகப் பெறப்பட்டது.

ஆண்டு விழா :

கடந்த 27-09-2026 ஞாயிறன்று நமது சபையின் 42வது ஆண்டு விழா திருப்பலியோடு தொடங்கி பின்னர், பங்கு ஆலய பல்நோக்கு மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் நமது பங்குத்தந்தை அருட்பணி. தாமஸ் பிரேம்குமார் அவர்களின் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. விழாவில், சித்தாலப்பாக்கம்,

பள்ளிக்கரணை, ஒட்டியம்பாக்கம் கிளைச்சபை உறுப்பினர்களும், நமது பங்கின் பங்குப் பேரவை உறுப்பினர்களும், பக்த சபை உறுப்பினர்களும், உபகாரிகளும், தத்துக் கிராமத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆண்டு அறிக்கையும், வரவு செலவு அறிக்கையும் வாசிக்கப்பட்டது. ஓவியப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

எங்களது பிறரன்பு பணிகளுக்கு தொடர்ந்து முழு ஆதரவு அளித்து வருகின்ற நமது பங்குத் தந்தை அவர்களுக்கும், உதவிப் பங்குத்தந்தை அவர்களுக்கும், உபகாரிகளுக்கும், பங்கு மக்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இறை வேண்டலில் நிலைத்திருப்போம். பிறரன்பு பணிகளுக்கு உதவ விருப்பமுள்ளவர்கள் சபை உறுப்பினர்களை அணுகவும்.

புனித வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள்.

அவர்களால் அடக்க முடியாத கடவுள்

திரு. ராபர்ட் கிளமெண்ட்ஸ்

கிறிஸ்தவர்களைக் கண்டு ஏன் யாராவது பயப்பட வேண்டும்? இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் நாம் வெறும் 2.3 சதவிகிதம் மட்டுமே. தேர்தல்களில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு நம்மிடம் எண்ணிக்கை இல்லை. நம்மை பின்தொடர்ந்து வருவது மிகப்பெரிய சக்தி அல்ல. நமது பள்ளிகள், மருத்துவ மனைகள், முதியோர் இல்லங்கள் மற்றும் சமூகத்தால் மறக்கப்பட்டவர்களுக்காக பராமரிப்பு மையங்கள் என நமது நிறுவனங்களில் பெரும்பாலானவை மக்களுக்கு சேவைசெய்து வருகின்றன.

அப்படியிருக்க ஏன் இந்த பயம்? ஒருவேளை அவர்கள் பயப்படுவது 2.3 சதவிகித கிறிஸ்தவர்களைக் கண்டு அல்ல. அவர்கள் பயப்படுவது அடக்க முடியாத கிறிஸ்துவைக் கண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஏரோது, குழந்தையான இயேசுவைக் கொல்ல முயன்றான். அவன் தோல்வியடைந்தான். மதத் தலைவர்கள் அவரை மௌனமாக்க முயன்றனர். அவர்களும் தோல்வியடைந்தனர். பிலாத்து அவரிடமிருந்து தன் கைகளைக் கழுவிக்கொள்ள முயன்றான். அவனும் தோல்வியடைந்தான். உரோமப் பேரரசு அவரை சிலுவையில் அறைந்தது. அவரது கல்லறையை மூடி, அதன் வெளியே காவலுக்கு வீரர்களை நிறுத்தியது. அவர்களும் தோல்வியடைந்தனர். மூன்றாம் நாளில், அந்தக்கல் உருண்டு அகற்றப்பட்டது.

வரலாறு முழுவதும் பேரரசர்கள் அவரது பெயரைத் தடை செய்துள்ளனர். சர்வாதிகாரிகள் அவரது பைபிளை எரித்துள்ளனர். அரசுகள் அவரது சீடர்களைச் சிறையில் அடைத்துள்ளன. கும்பல்கள் அவரது தேவாலயங்களைத் தாக்கியுள்ளன. ஆனாலும், இயேசு பூட்டப்பட்ட கதவுகளைக் கடந்து நடந்து கொண்டிருக்கிறார். இதுதான் உலக அதிகார மையங்களை அமைதியிழக்கச் செய்கிறது. ஒலிபெருக்கி தேவையில்லாமல் பேசக்கூடிய கடவுளை நீங்கள் அடக்க முடியாது. மனித இதயத்திற்குள் நுழையும் கடவுளை நீங்கள் கைது செய்ய இயலாது. ஏற்கனவே மரணத்தை வென்றுவிட்ட கடவுளை நீங்கள் பயமுறுத்த முடியாது. இன்று மகாராட்டிராவில் மதமாற்றத் தடைச்சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கோவாவிலும்

இதுபோன்ற சட்டங்கள் முன்னேறுகின்றன. கிறிஸ்தவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று உள்ளது. நாம் அஞ்சாமல் இருக்கவேண்டும். நாம் யாரையும் கட்டாயப்படுத்தி கிறிஸ்தவர்களாக மாற்றுவதில்லை. வலுக்கட்டாயம், மோசடி அல்லது எந்தவிதமான தூண்டுதலாலும் மதமாற்றத்தை ஆதரிப்பதில்லை. இயேசு ஒருபோதும் தன்னைப் பின்பற்றும்படி யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. அவர் சொன்னது மிகவும் எளிமையானது. வாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள் (மத்தேயு 4 : 19) அதே நேரத்தில் இயேசு நமக்குக் கட்டளையிட்டார். உலகமெங்கும் சென்று படைப்புகளுக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் (மாற்கு 16 : 15)

இந்தக் கட்டளை எந்த அரசாங்கமும் பிறப்பித்தது அல்ல. எனவே, அதை எந்த அரசாங்கமும் ரத்து செய்ய இயலாது. பேதுருவையும், யோவானையும் இயேசுவைப்பற்றிப் பேசக்கூடாது என்று அதிகாரிகள் கட்டளையிட்டபோது அவர்கள் பதிலளித்தார்கள் "நாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பேசாமல் இருக்க முடியாது" (திருத்தூதர் பணிகள் 4 : 20) அவர்கள் கலவரம் செய்யவில்லை. அவர்கள் யாரையும் மிரட்டவில்லை. அவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் தொடர்ந்து பகிர்ந்துகொண்டார்கள். இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் அதுவே நமது பதிலாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவரும் சட்டத்தை மதிக்க வேண்டும். ஒவ்வொரு சேவையையும் முறையாகப் பதிவு செய்யவேண்டும். அநீதியை அமைதியான முறையில் எதிர்க்க வேண்டும். ஆனால், எந்தக் கிறிஸ்தவரும் பயத்தின் காரணமாக,

» ஒரு தேவாலயத்தை மூடிவிடக் கூடாது
» ஒரு செபத்தை மௌனமாக்கக் கூடாது
» துன்பப்படுகிறவருக்கு ஆதரவாக நீளும் கையை தடுக்கக் கூடாது

தானியேலை சிங்கக் குகையில் நினைவு கூருங்கள். நெருப்புச் சூளையில் இருந்த அந்த மூன்று இளைஞர்களை நினைவு கூருங்கள். சிறையில் பாடல் பாடிய பவுலை நினைவு கூருங்கள். பெந்தக்கோஸ்தே விழாவுக்குப் பிறகு பயத்திலிருந்து வெளியே வந்த சீடர்களை நினைவு கூருங்கள். பைபிள் முழுவதும், கடவுளை அடக்கிவிடலாம் என்று நினைத்த ஆட்சியாளர்களின் கறைகளால் நிறைந்துள்ளது. இன்று அவர்களின் சிம்மாசனங்கள் இல்லை. அவர்களின் பேரரசுகள் வரலாற்றின் பக்கங்களாகிவிட்டன. அவர்களில், பலரது பெயர்கள்கூட, அவர்கள் கிறிஸ்துவைத் தடுக்க முயன்றதால்தான் இன்று நினைவு கூரப்படுகின்றன.

ஆனால், இயேசு இன்றும் இருக்கிறார். எனவே, சிறிய மந்தையே, பயப்படாதே! அவர்கள் நமது எண்ணிக்கையைப் பார்த்து பயப்படவில்லை. கிறிஸ்தவர்கள் தங்களைத் தாக்கியவர்களை மன்னிக்கும்போது, அயலார்களை அன்பு செய்யும்போது, குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும்போது, நோயாளிகளைக் குணப்படுத்த உதவும்போது, கைவிடப்பட்டவர்களுக்கு ஆறுதலாக இருக்க முயலும் போது இத்தகையச் செயல்களைப் பார்த்தே அவர்கள் பயப்படுகிறார்கள்.

யாராவது ஒருநாள் கேட்கலாம். நீங்கள் ஏன் இதையெல்லாம் செய்கிறீர்கள் என்று. அதற்கான பதில் ஒரே ஒரு பெயர்: 'இயேசு' எல்லாப் பெயர்களுக்கெல்லாம் மேலான பெயர். எந்த சட்டத்தாலும் அழிக்க முடியாத பெயர்.

அவர் ஒருவர்தான் யாராலும் அடக்க முடியாதக் கடவுள்.

இயல் II ஆயர் மன்றம்

தி.ச.342:

ஆயர் மன்றம் என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலங்களில் ஒன்றுகூடும் ஆயர்களின் குழுவாகும். இந்த ஆயர்கள் உரோமைத் தலைமைக்குருவுக்கும் ஆயர்களுக்குமிடையே மிக நெருக்கமான ஒற்றுமையைப் பேணி வளர்க்கின்றனர் விசுவாசம், ஒழுக்க நெறிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், திருச்சபை ஒழுங்குமுறைகளைக் காக்கவும் உறுதிப்படுத்தவும், உலகில் திருச்சபைப் பணியைப் பொறுத்தவரையில் ஆய்வுக்குரிய ஆலோசனையால் உரோமைத் தலைமைக் குருவுக்கு உதவி புரிகின்றனர்.

தி.ச. 343:

முன்வைக்கப்பட்ட காரியங்களைப்பற்றி ஆய்வு செய்வதும் அவற்றைப் பற்றிய தங்கள் கருத்துக்களை எடுத்துரைப்பதும் ஆயர் மன்றத்திற்கு உரியது. ஆனால் அவற்றுக்குத் தீர்வு காண்பதோ அவற்றைப் பற்றி ஆணைகள் வெளியிடுவதோ ஆயர் மன்றத்திற்கு உரியதன்று; ஆயினும் ஒரு சில காரியங்களில் உரோமைத் தலைமைக்குரு மன்றத்திற்குத் தீர்மான அதிகாரம் வழங்கினால் அவற்றின் தீர்மானங்களை உறுதிசெய்வது அவருக்கு உரியது.

தி.ச. 344:

ஆயர் மன்றம் உரோமைத் தலைமைக்குருவின் நேரடி அதிகாரத்தின் கீழ் உள்ளது; இதில் அவருடைய தனிச்சிறப்புரிமை பின்வருமாறு

1. அவருக்கு அது உகந்ததெனத் தோன்றினால் மன்றத்தைக் கூட்டுவது, அதன் அமர்வுகள் நடத்தப்பட வேண்டிய இடத்தைக் குறிப்பிடுவது
2. சிறப்புச் சட்ட விதிமுறைக்கேற்ப, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் தேர்தலை உறுதிசெய்வது, அதன் மற்ற உறுப்பினர்களைக் குறிப்பிடுவது, நியமனம் செய்வது;
3. மன்றம் நடத்தப்படுவதற்கு முன்பு சிறப்புச் சட்ட விதிமுறைக்கேற்ப, உரிய நேரத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டிய காரியங்களின் தலைப்புகளை நிர்ணயிப்பது;
4. நிகழ்ச்சி நிரலை வரையறுப்பது;
5. தாமாகவோ மற்றவர் மூலமாகவோ மன்றத்திற்குத் தலைமை ஏற்பது;
6. மன்றத்தை முடித்து வைப்பது, மாற்றி அமைப்பது, தற்காலிகமாக ஒத்திவைப்பது மற்றும் கலைப்பது.

தி.ச.345:

அனைத்துலகத் திருச்சபை நலனுடன் நேரடித் தொடர்புடைய காரியங்களைப்பற்றி விவாதித்திட ஆயர்மன்றம் பொது அமர்வில் கூடலாம்; அத்தகைய அமர்வு சாதாரணமானதாகவோ அசாதாரணமானதாகவோ அமையலாம்; குறிப்பிட்ட ஒரு மண்டலம் அல்லது மண்டலங்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள காரியங்களைப் பற்றி விவாதிக்க ஆயர்மன்றம் சிறப்பு அமர்விலும் கூடலாம்.

தி.ச.346:

